भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सूक्वार, 26 ऐपरल 1996 / 1918 शक

New Delhi, Friday, 26th April 1996

புது தில்லி, 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26ஆம் தேதி, வெள்ளிக்கிழமை

## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 26th April 1996

***சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்***

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 26, ஏப்ரல் 1996*

The translation in Tamil of the Destruction of Records Act, 1917 (5 of 1917), The Haj Committee Act, 1959 (51 of 1959), The National Highways Act, 1956 (48 of 1956), The Armed Forces (Emergency Duties) Act, 1947 (15 of 1947), The Copy Rights Act, 1957 (14 of 1957), The Muslim Women (Protection of Rights of Divorce) Act, 1986 (25 of 1986), The Bankers' Books Evidence Act, 1891 (18 of 1891), The Antiquities and Art Treasures Act, 1972 (52 of 1972), The Bonded Labour System (Abolition) Act, 1976 (19 of 1976), The Interest Act, 1978 (14 of 1978), The Disputed Elections (Prime Minister and Speaker) Act, 1977 (16 of 1977) are hereby Published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பதிவணங்களை அழித்தல் சட்டம்,* 1917 (5/1917), *ஹஜ்குழுச் சட்டம்,* 1959 (51/1959), *தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம்,* 1956 (48/1956), *ஆயுதப்படையினர் (நெருக்கடி நிலைக்கடமைகள்) சட்டம்,* 1947 (15/1947), *பதிப்புரிமைச் சட்டம்,* 1957 (14/1957), *முஸ்லிம் பெண்கள் (மணமுறிவு மீதான உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம்,* 1986 (25/1986), *வங்கியர் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டம்,* 1891 (18/1891), *தொல்பொருள்கள் மற்றும் கலைக்கருவூலங்கள் சட்டம்,* 1972 (52/1972), *கொத்தடிமை வேலைமுறை (ஒழிப்புச்) சட்டம்,* 1976 (19/1976), *வட்டிச் சட்டம்,* 1978 (14/1978), *மறுத்து வாதிடப்படும் (தலைமை அமைச்சர் மற்றும் பேரவைத்தலைவர்) தேர்தல்கள் சட்டம்,* 1977 (16/1977) *ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம்,* 1973 (50/1973)*இன் பிரிவு* 2*இன் கூறு(அ)வின்படி இவையே தமிழில் அதிகார உறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

**PRICE: Rs. 60.00**

# வங்கியர் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டம் ,1891

(சட்ட எண் 18/1891)[1]

[1891, அக்டோபர் 1]

வங்கியர் கணக்குப் புத்தகங்களைப் பொறுத்து, சாட்சியச் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு சட்டம்.

வங்கியர் கணக்குப் புத்தகங்களைப் பொறுத்து சாட்சியச் சட்டத்தைத் திருத்துவது உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப் படுகின்றது :—

குறுந் தலைப்பும் அளாவுகையும்.

1. (1) இந்தச் சட்டம், வங்கியர் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டம், 1891 என்று வழங்கப்பெறும்.

(2) இது, [3] [[2](ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக) இந்தியா முழுவதையும்] அளாவி நிற்கும். [4] [ * * * * * ]

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், பொருளுக்கு அல்லது தறுவாய்க்கு ஒவ்வாததாக எதுவும் இருந்தாலன்றி,—

[5] [(1) ''நிறுமம்'' என்பது, நிறுமங்கள் சட்டம், 1956 இன் பிரிவு 3இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான நிறுமம் எதுவும் என்று பொருள்படும்; மற்றும் அந்தச் சட்டத்தின் பிரிவு 591இன் பொருளின்படி ஓர் அயல் நாட்டு நிறுமத்தையும் உள்ளடக்கும்; (1/1956)

(1இ) ''கூட்டுருமம்'' என்பது, இந்தியாவில் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் நிறுவப்பட்ட கூட்டுருமக் குழுமம் எதுவும் என்று பொருள்படும் ; மற்றும் இந்தியச் சேம வங்கி, இந்திய அரசு (ஸ்டேட்) வங்கி மற்றும் இந்திய அரசு (ஸ்டேட்) வங்கியின் (துணை வங்கிகள்) சட்டம், 1959இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான துணை வங்கி எதையும் உள்ளடக்கும்;]

(2) ''வங்கி'' மற்றும் ''வங்கியர்'' என்பது,—

[5] [(அ) வங்கித் தொழிலை நடத்துகின்ற நிறுமம் அல்லது கூட்டுருமம் எதுவும்,

(ஆ) இந்தச் சட்டத்தின் வகையங்கள் எந்தக் கூட்டாண்மையின் அல்லது தனியாளின் கணக்குப் புத்தகங்களுக்கு இதன் பின்பு வகைசெய்யப்பட்டவாறு நீட்டிக்கப்பட்டிருக்குமோ அந்தக் கூட்டாண்மை எதுவும் அல்லது தனியாள் எவரும்,

[6] (இ) அஞ்சலகச் சேமிப்பு வங்கி அல்லது பண அஞ்சல் அலுவலகம் எதுவும்,]

என்று பொருள்படும்;

---

1. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவர உரைக்காக, 1891 இந்திய அரசிதழ், பகுதி V பக்கம் 24ஐப் பார்க்கவும்: தேர்வுக்குழுவின் அறிக்கைக்காக மேற்படி அரசிதழின் பக்கம் 189ஐப் பார்க்கவும்; மன்றத்தமர் நடவடிக்கைகளுக்காக மேற்படி அரசிதழ், பகுதி VI, பக்கங்கள் 15, 25, 117, 135, 140 ஆகியவற்றைப் பார்க்கவும்.

2. ''பகுதி (அ) மாநிலங்கள் நீங்கலாக'' என்ற சொற்கள், பகுதி (ஆ) மாநிலங்கள் (சட்டங்கள்) சட்டம், 1951இன் (3/1951) பிரிவு 3ஆலும் இணைப்புப்பட்டியலாலும் மாற்றாக அமைக்கப்பட்டன.

3. ''இந்திய மாகாணங்கள் அனைத்திற்கும்'' என்ற சொற்களுக்கு மாற்றாக பகுதி (அ) மாநிலங்கள் நீங்கலாக, ''இந்தியா முழுவதையும்'' என்ற சொத்கள், சட்டங்கள் இணைக்க ஆணை, 1950ஆல் அமைக்கப்பட்டன.

4. உட்பிரிவு (2)இன் முடிவிலுள்ள ''மற்றும்'' என்றசொல்லும், உட்பிரிவு (3)உம் நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1914ஆல (10/1914) நீக்கறவு செய்யப்பட்டன.

5. அரசு ஒன்று சேர்க்கப்பட்ட (பல்வகை வகையங்கள்) சட்டம், 1962இன் (56/1962) பிரிவு 4 (11)ஆல் (14—12—1962) முன்பிருந்த கூறு (2)முன்பிருந்த கூறு (அ)வுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

6. வங்கியர் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டத்தின் (1/1893) பிரிவு 2ஆல் சேர்க்கப்பட்டது.

(3) ''வங்கியர் கணக்குப் புத்தகங்கள்'' என்பது, பேரேடுகள், நாட் குறிப்பேடுகள், பணக்குறிப்பேடுகள், கணக்குப் புத்தகங்கள், மற்றும் ஒரு வங்கியில் வழக்கமான அலுவலில் பயன்படுத்தப்படுகின்ற பிற புத்தகங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் ;

[1] [(4) ''சட்ட நடவடிக்கை'' என்பது—

(i) எந்த நடவடிக்கை அல்லது விசாரணை எதிலும் சாட்சியம் கொடுக்கப்படுகிறதோ அல்லது கொடுக்கப்படலாமோ அந்த நடவடிக்கை அல்லது விசாரணை எதுவும் ;

(ii) பொது தீர்ப்பு, மற்றும்

(iii) காவல் அலுவலராலோ அல்லது நடுவரால் அல்லது அப் போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதனாலும் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட (நடுவர் அல்லாத) பிற நபர் எவராலுமோ நடத்தப்படுவனவும் சாட்சியத்தைத் தொகுப்பதற் கானவையும் குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 இன் படியான அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள ஏதேனும் பிற சட்டத்தின்படியானவையுமான புலானய்வு அல்லது விசாரணை எதுவும்,

என்று பொருள்படும்;]

(5) ''நீதிமன்றம்'' என்பது, எந்த நபர் அல்லது நபர்கள் முன்பு, ஒரு சட்ட நடவடிக்கை நடத்தப்படுகின்றதோ அல்லது எடுக்கப்படுகின்றதோ அந்த நபர் அல்லது நபர்கள் என்று பொருள்படும் ;

(6) ''நீதிபதி'' என்பது, ஓர் உயர் நீதிமன்ற நீதிபதி என்று பொருள்படும்;

(7) ''விசாரணை'' என்பது, எந்த நீதிமன்றத்தின் முன்பு சாட்சியம் எடுத்துக் கொள்ளப்படுகின்றதோ அந்த நீதிமன்றத்தின் முன்பான கேட்பு எதுவும் என்று பொருள்படும் ;

(8) ''உறுதிச் சான்றளிக்கப்பட்ட படி'' என்பது, அது, வங்கியின் கணக்குப் புத்தகங்களிலுள்ள பதிவு எதனின் படியோடு அந்தப் பதிவின் ஓர் உண்மைப்படி என்றும், அந்த வங்கியின் பொதுமுறையான கணக்குப் புத்தகம் ஒன்றில் அந்தப் பதிவு அடங்கியுள்ளது என்றும், மற்றும் வழக்கமான மற்றும் இயல்பான வணிக நடைமுறையில் அந்தப் பதிவு செய்யப்பட்டது என்றும், அந்தப் புத்தகம் இப்போதும் அந்த வங்கியின் பாதுகாப்பில் இருக்கிறது என்றும் [2] [அந்தப் படி இயந்திர அல்லது பிற செய்முறை வழி பெறப்பட்டவிடத்து, அது தான் சரியான படி என்று உறுதி செய்து கொள்வதற்காக அந்தப் படிக்கான மேலுமான உறுதிச்சான்று என்றும், ஆனால், அந்தப் படி எந்தப் புத்தகத்தி லிருந்து தயாரிக்கப்பட்டதோ அந்தப் புத்தகம் வழக்கமான வங்கி வணிக நடை முறையின்போது, அழிக்கப்பட்டு, அந்தத் தேதிக்குப் பின்பு அவ்வாறு தயாரிக் கப்பட்டுள்ளவிடத்து, அந்தப் படிக்கான மேலுமான உறுதிச்சான்று என்றும், அந்தப் படியின் அடியில் எழுதப்பட்டிருக்கிற உறுதிச்சான்று ஒவ்வொன்றும் அதாவது அந்த வங்கியின் முதன்மைக் கணக்கர் அல்லது மேலாளரால் அவருடைய பெயருடனும் அலுவல் முறைப் பதவிப்பெயருடனும் தேதியிடப்பட்டு கையொப்ப மிடப்பட்டிருக்கின்ற, உறுதிச்சான்று சேர்ந்தது, என்று பொருள்படும்.]

*சட்டத்தின் வகையங்களை நீட்டிப்பதற்கான அதிகாரம்.*

3. [3] [மாகாண அரசாங்கம்], அவ்வப்போது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை, தன் ஆட்சியின் கீழுள்ள ஆட்சிநிலவரைகளுக்குள் வங்கியர்த் தொழிலை நடத்திவரும், மற்றும் ஒரு பணக்குறிப்பேடு, ஒரு நாட்குறிப்பேடு, அல்லது நடவடிக்கைக் குறிப்பேடு மற்றும் ஒரு பேரேடு ஆகிய பொதுமுறைக் கணக்குப் புத்தகங்களின் மூன்றுக்குக் குறையாத ஒரு தொகுதியை வைத்துவரும், கூட்டாண்மை எதனின் அல்லது தனி நபர் எவரின் கணக்குப் புத்தகங்களுக்கு, நீட்டிக்கலாம், மற்றும் அதைப் போன்ற முறையில் அந்த அறிவிக்கை எதையும் இறுத்தறவு செய்யலாம்.

---

1. வங்கித் தொழில் சட்டங்கள் (திருத்தம்) சட்டம் (1/1984) பிரிவு 2ஆல் (15—2—1984) மாற்றாக அமைக்கப்பட்டது.

2. வங்கித்தொழில் சட்டங்கள் (திருத்தம்) சட்டத்தால் (1/1984) ''அத்தகைய உறுதிச் சான்று, அந்த வங்கியின் முதன்மைக் கணக்கர் அல்லது மேலாளரால் அவருடைய பெயருடனும் அலுவல்முறைப் பதவிப் பெயருடனும் தேதியிடப்பட்டு கையொப்பமிடப்பட்டிருக்கின்றது'' என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

3. சட்டங்கள் இணக்க ஆணை, 1950ஆல் ''மாகாண அரசாங்கம்'' என்ற சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

4. இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, வங்கியர் கணக்குப் புத்தகத்தில் உள்ள பதிவு எதனின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட படி ஒன்று, சட்ட நடவடிக்கைகள் அனைத்திலும், அந்தப் பதிவுகள் இருந்துவருவதுபற்றிய முகநிலைச்சான்றாக பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும், மற்றும் அதில் பதிவு செய்யப்பட்டுள்ள பொருட்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் கணக்குகளின் சாட்சியமாக முதன் முதலான பதிவு மட்டுமே எந்த நேர்வில் மற்றும் எந்த அளவுக்குச் சட்டத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளத்தக்கதோ அந்த நேர்வு ஒவ்வொன்றிலும் மற்றும் அந்த அளவுக்கும் ஏற்கப்படுதல் வேண்டும் ; ஆனால், அதற்கு மேலுமோ அல்லது பிறவாறோ அன்று.

*வங்கியர் கணக்குப் புத்தகங்களிலுள்ள பதிவுகளை மெய்ப்பிப்பிற்கான முறை.*

5. ஒரு வங்கி அலுவலர் எவரும், அந்த வங்கி ஒரு தரப்பினராக இராத சட்ட நடவடிக்கை எதிலும், எந்த வங்கியர் கணக்குப் புத்தகத்தின் உள்ளடக்கம் இந்தச் சட்டத்தின்படி மெய்ப்பிக்கப்படக் கூடுமோ அந்த வங்கியர் கணக்குப் புத்தகம் எதையும் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று, அல்லது அதில் பதிவு செய்யப்பட்டுள்ள பொருட்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் கணக்குகளை மெய்ப்பிப்பதற்காக ஒரு சாட்சியாக முன்னிலையாக வேண்டும் என்று, தனியுறு காரணத்திற்காக நீதிமன்றத்தினால் அல்லது நீதிபதியினால் இடப் படும் ஆணை மூலம் அன்றி, கட்டாயப்படுத்தப்படத்தக்கவராகார்.

*வங்கி அலுவலரை கணக்குப் புத்தகங்களை முன்னிலைப்படுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தத் தக்கதாகாத நேர்வு.*

6. (1) சட்ட நடவடிக்கை ஒன்றின் தரப்பினர் எவரின் விண்ணப்பத்தின் பேரிலும், நீதிமன்றம் அல்லது நீதிபதி அந்தத் தரப்பினர் அந்த நடவடிக்கையின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் வங்கியர் கணக்குப் புத்தகத்திலுள்ள பதிவுகள் எவற்றையும் ஆய்வு செய்வதற்கும், அவற்றின் படிகளை எடுப்ப தற்கும், சுதந்திரமுடையவராயிருப்பார் என ஆணையிடலாம்; அல்லது அந்த நடவடிக்கையில் எழுவினாவாகவுள்ள பொருட்பாடுகள் தொடர்பான பிற பதிவுகள் எவையும், அந்த வங்கியின் கணக்குப் புத்தகத்தில் காணப்படவில்லை என்பதற்கு மேலுமான உறுதிச்சான்று ஒன்றுடன் சேர்த்து, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படவேண்டிய ஒரு காலத்திற்குள், அந்தப் பதிவுகளின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட அனைத்துப் படிகளையும் வங்கி தயாரித்து முன்னிலைப்படுத்த வேண்டுமென்று ஆணையிடலாம்; மேலும் உறுதிச்சான்றளிக்கப்பட்ட படிகளைப் பற்றி இதற்குமுன் பணிக்கப்பட்ட முறையில் அந்த மேலுமான உறுதிச்சான்று தேதியிடப்பட்டு கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

*நீதிமன்றம் அல்லது நீதிபதியின் ஆணையால் கணக்குப் புத்தகங்களை ஆய்வு செய்தல்.*

(2) இந்தப் பிரிவின் அல்லது இதற்கு முந்திய பிரிவின்படியான ஆணை, அந்த வங்கியை முன்னிலையாகுமாறு அழைப்பாணையிட்டோ அழைப்பாணை யிடாமலோ பிறப்பிக்கப்படலாம், மேலும், அதற்குக் கீழ்ப்படிய வேண்டியதற்கு (வங்கி விடுமுறை நாட்கள் நீங்கலாக, மூன்று முழுநாட்களுக்கு முன்பு நீதிமன்றம் அல்லது நீதிபதி பிறவாறு பணித்தாலன்றி, அது அந்த வங்கிக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

(3) மேற்கூறப்பட்டவாறான ஆணை எதற்கும் கீழ்ப்படிவதற்காக வரம்பிடப்பட்ட காலத்திற்கு முன்பு, எந்த நேரத்திலும், வங்கியானது ஒன்று அந்த விசாரணையில் தங்களுடைய கணக்குப் புத்தகங்களை முன்னிலைப் படுத்துவதற்கு அல்லது அந்த ஆணைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற் கான தங்களுடைய கருத்துப் பற்றிய அறிவிப்பைக் கொடுப்பதற்கு, முன் வரலாம்; மேலும் அதன்பேரில், அந்த ஆணை மேற்கொண்டு ஆணையில்லாமல் செயலுறுத்தப்படுத்துதல் ஆகாது.

7. (1) இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன் நோக்கங்களுக்காக, நீதிமன்றத்துக்கு அல்லது நீதிபதிக்குச் செய்யப்படும் விண்ணப்பம் எதனின் செலவுத் தொகை, மற்றும் இந்தச்* சட்டத்தின்படி அல்லது அதன் நோக்கங் களுக்காக நீதிமன்றத்தினால் அல்லது ஒரு நீதிபதியினால் இடப்பட்ட ஆணை ஒன்றின்படி செய்யப்பட்ட அல்லது செய்யப்படவேண்டிய ஏதொன்றின் செலவுத் தொகை, நீதிமன்றத்தின் அல்லது நீதிபதியின் உளத்தேர்வின்படி இருக்கும்; அந்த நீதிமன்றம் அல்லது நீதிபதி, வங்கியின் தவறுகை அல்லது முறையற்ற காலத்தாழ்வு எதன் விளைவாக, (தரப்பினர் எவராலும்) அத்தகைய செலவுத் தொகை அல்லது அதன் பகுதி எதுவும் செய்யப் பட்டிருக்குமாயின், அந்தத் தரப்பினருக்கு அவை செலுத்தப்பட வேண்டுமென மேலும் ஆணையிடலாம்.

*செலவுத் தொகைகள்.*

(2) ஒரு வங்கிக்கு அல்லது வங்கியினால் செலவுத்தொகை செலுத்தப் பட வேண்டியதற்காக இந்தப் பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும், அந்த வங்கி அந்த நடவடிக்கைக்கு ஒரு தரப்பினராய் இருந்தாற்போன்றே, செயலுறுத்தப்படுத்தப்படலாம்.

(3) செலவுத் தொகை அளித்து, இந்தப் பிரிவின்படி இடப்பட்ட ஆணை எதுவும், அந்த ஆணையின் பெயர் குறிப்பிடப்பட்ட உரிமைவழக்கு நீதிமன்றம் எதற்கும் விண்ணப்பம் செய்வதன்பேரில், அந்த ஆணையானது அதனால், பிறப்பிக்கப்பட்ட பணத் தீர்ப்பாணையாய் இருந்தாற்போன்றே, அந்த நீதிமன்றத்தால் நிறைவேற்றப்படலாம்:

வரம்புரையாக.—அந்த ஆணையை இடுகின்ற நீதிமன்றம் அல்லது நீதிபதி, செலவுத் தொகையைச் செலுத்துவதைப் பற்றிய அதன் அல்லது அவருடைய பணிப்புரைகளைச் செயலுறுத்துவதற்காக அது அல்லது அவர் கொண்டிருக்கலாகும் அதிகாரம் எதையும், இந்த உட்பிரிவிலுள்ள எதுவும் திறக்குறைவுசெய்வதாகப் பொருள்கொள்ளப்படுதல் ஆகாது.

1[நீதிமன்றத்தின் ஆணையானது, குறித்துரைக்கப்பட்ட அலுவலரால் இடப்பட்ட ஆணையாகப் பொருள் கொள்ளப்படுதல்.

8. பிரிவு 2இன் கூறு (4)இன் உட்கூறு (iii)இல் சுட்டப்பட்ட புலனாய்வு அல்லது விசாரணை எதற்கும் பிரிவுகள் 5, 6, 7 ஆகியவை பொருந்துறுகையில், சொல்லப்பட்ட பிரிவுகளில் சுட்டப்பட்ட நீதிமன்றத்தின் அல்லது நீதிபதியின் ஆணையானது, உரிய அரசாங்கத்தால் இதன்பொருட்டுக் குறித்துரைக்கப்படலாகும் காவல் துறை கண்காணிப்பாளரின் படிநிலைக்கு கீழ்நிலையில் இல்லாத, படிநிலையிலுள்ள அலுவலரால் இடப்பட்ட ஆணையாக சுட்டுகையில் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவில், ''உரிய அரசாங்கம்'' என்பது, புலனாய்வு அல்லது விசாரணையைச் செய்கின்ற காவல்துறை அலுவலர் அல்லது பிற நபர் எவரையும், பணியமர்த்தியுள்ள அரசாங்கம் என்று பொருள்படும்.

---

*1. வணிகத்தொழில்கள் சட்டங்கள் (திருத்தம்) சட்டம், 1984இன் (1/1984) பிரிவு 2ஆல் புகுத்தப்பட்டது, (15—2—1984).]*